**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No.86/2024**

**வழக்கு சாட்சி D.W.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.கொளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரியா | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : வேலுச்சாமி | கணவர் பெயர் | : மகுடீஸ்வரன் |
| கிராமம் | : அப்பனூத்து | வயது | : சுமார் 42 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 26.03.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், அப்பனூத்து கிராமம், 1–வது வார்டில் வசிக்கும் மகுடீஸ்வரன் மனைவி இந்து சுமார் 42 வயதுள்ள பிரியா ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இன்று நான் தாக்கல் செய்திருக்கும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையை ஏற்றுக் கொண்டு நீதிமன்றம் சரியென கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

**வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.26 18:21:20 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்